## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 112/2020**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அம்மணி | தொழில் | : விவசாயம் |
| கணவர் பெயர் | : ராமசாமி | சமயம் | : |
| கிராமம் | : பொன்பத்தி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 55 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. சுதாகர் Gr.1-2784 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர். )**

**முதல் விசாரணை**

**1.** நான் பொன்பத்தி கிராமத்தில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 பரசுராமன், பட்டியல் சாட்சி ஜெயக்குமார் எனது பிள்ளைகள். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து நிலத்துக்காரர்கள்.

2. கடந்த 5, 6 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகம் இல்லை . ஒரு நாள் எனது நிலத்தில் மாலை 6 மணியளவில் நெல் பயிரில் நாங்கள் களை பறித்து கொண்டிருந்தோம். அப்போது எனது பிள்ளைகள் பரசுராமன், ஜெயக்குமார் கழனியை சுற்றி பார்த்து கொண்டிருந்தார்கள். அப்போது பொது வரப்பில் இருந்த எனது 2 பிள்ளைகளையும் கொடுவா, தடிக்கொம்பு ஆகியவற்றை கொண்டு ஆஜர் எதிரிகள் அடித்துவிட்டார்கள். அப்போது பக்கத்து கழனியில் இருந்த பரசுராமன் வந்து காயம்பட்ட என் பிள்ளைகளை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு முடியாது என்று சொன்னதால் பெரிய மகன் பரசுராமன் மட்டும் விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். சின்ன மகன் மட்டும் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் விசாரித்தனர்.

**( 1. 30.01.2018 தேதியிட்ட புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

என் பிள்ளைகள் இருவரும் என்னுடன் விவசாயம் தான் பார்த்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் எதிரி அன்பழகன் சென்னையில் வேலை பார்த்து கொண்டு ஊருக்கு வந்து செல்வார் என்றால் சரிதான். முன் விரோதம் இருப்பதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என் முன்விரோதம் என்றால் பொது வரப்பில் நடக்க முடியாத வகையில் மரங்களை வைத்து பிரச்சனை செய்ததால் பிரச்சனை. 2ம் எதிரி அரிகிருஷ்ணனின் தம்பி தாமோதரனிடமிருந்து சில சொத்துக்களை நாங்கள் கிரையம் வாங்கினோம் என்றால் சில வருடங்களுக்கு முன்பு வாங்கினோம். 2ம்எதிரி அரிகிருஷ்ணன் தனக்கு சொந்தமான சொத்துக்களை அவரது தம்பி தாமோதரனுக்கு சில சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. தாமோதரனுக்கு சொந்தமான நிலத்தை அவரது அண்ணன் அரிகிருஷ்ணன் போக்கியம் வைத்திருந்தார் என்றால் இல்லை. கிரையம் வாங்கியிருந்தார். சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக ஏரி பாசனத்தை நிலத்திற்கு பாய்ச்சும் வகையில் 3 அடி அளவில் பொது வாய்க்கால் வைத்து அங்கிருந்தவர்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் அவ்வாறு இல்லை. மேற்படி பொது வாய்க்கால் வைத்து ஆஜர் எதிரிகள் பயன்படுத்தி வந்ததை நாங்கள் தரைமட்டமாக ஆக்கினோம் என்றால் சரியல்ல. பிறகு இருதரப்பிலும் பஞ்சாயத்து பேசி வாய்க்கால் போடப்பட்டது என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் பொது வாய்க்கால் போட்ட நிலையில் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சண்டை நடந்தபோது நான் வீட்டில் இருந்தேன் என்றால் கழனியில் தான் இருந்தேன். எப்போது சம்பவம் நடந்தது தெரியும் என்றால் சம்பவத்தின் போது அங்கிருந்துதான் பார்த்தேன். புகாரில் சம்பவத்தின்போது இருந்து பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதியது என்றால் செஞ்சியில் வைத்து எழுதினோம். யார் யாரை எந்த ஆயுதத்தால் அடித்தார் என்று முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கொம்பு, உருட்டுகட்டை, கொடுவா ஆகியவற்றால் தாக்கினார்கள்.

என் ஊருக்கும் செஞ்சி காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1 கி.மீ. தூரம் இருக்கும். சம்பவம் நடந்து அடுத்த நாள் தான் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றே இரவு புகார் கொடுத்தேன். காயம்பட்ட என் பிள்ளைகளை யார் யார் அழைத்து சென்றார்கள் என்றால் என் தம்பி, என்

கணவர், நான் அங்கிருந்தவர்கள் எல்லோரும் செஞ்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சம்பவ சமயத்தில் எதிரிகள் அவர்கள் நிலத்தில் வேர்க்கடலை பயிர் செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் தங்களது நிலத்தில் கல் மூலமாக அடிக்கி நிழலுக்கு கொட்டகை ஒன்று போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த கொட்டகையில் ஆஜர் எதிரிகள் அமர்ந்து கொண்டிருந்தபோது அவர்களை தாக்க என் பிள்ளைகள் ஓடியபோது கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை கொண்டு பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாக்கிய ஆயுதத்தை போலிசாரிடம் கொடுத்தோமா என்றால் காயம்பட்ட பிள்ளைகளை மருத்துவமனைக்கு தான் சேர்த்தோம். நான் கூறுவது சம்பவம் நடக்க வில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் வாங்கினார்கள். மருத்துவமனையில் எந்த பிள்ளையோடு நான் இருந்து பார்த்தேன் என்றால் செஞ்சி மருத்துவமனையில் இருந்த எனது சின்ன மகனோடு இருந்தேன். எத்தனை நாள் இருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. மருத்துவமனையில் இருந்து போலிசார் வந்து பார்த்தார்களா என்றால் வந்து பார்த்தார்கள். மருத்துவமனையில் என் பிள்ளைகள் இடம் போலிசார் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் போலிஸ் வந்தார்கள் நான் அழுது கொண்டிருந்தேன். தெரியவில்லை. இந்த சம்பவத்திற்கு முன்பாக 1ம் எதிரி அன்பழகன் வீட்டில் இல்லாத போது அவரது தந்தையை அரிகிருஷ்ணனை என் பிள்ளைகள் தாக்கினார்கள் என்றால் சரியல்ல. முன் விரோதத்தில் பழி தீர்ப்பதற்காக பொய் வழக்கு தொடுத்தோம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.